# சிறுவர் அமுதம்

19 . 11 . 1995

கின்ணம் 6 எண்ணம் 7



சிறுவர் இலக்கிய மாதசஞ்சிகை

சொல்லவும் கூடுவதில்லை – அவை
சொல்லுந் திறமை தமிழ் மொழிக்கில்லை
மெல்லத் தமிழினிச் சாகும் – அந்த
மேற்கு மொழிகள் புவிமிசை யோங்கும்



அன்புச் சிறுவர் சிறுமியரே!

நாட்கள் தான் எவ்வளவு விரைவாகச் சென்று கொண்டிருக்கின்றன. இதோ மார்கழி மாதம் வந்து விட்டது. அடுத்த ஆண்டும் பிறக்கப் போகின்றது. வரும் ஆண்டாவது தமிழ் இனத்திற்கு மகிழ்ச்சியைத் தருமா? காலம் பதில் சொல்லுமா? கவலை தான் தொடருமா?. தமிழினம் என்பது நம் நாட்டைப் பொறுத்தவரை அழிந்தே விடுமா? கேள்விக்குறியாகத் தான் உள்ளது. நம் நாடு மட்டும் தானா! உலகின் பல நாடுகளிலும் இது தானே நடைபெறுகிறது.

மனித உயிர்கள் துச்சமாக மதிக்கப் படுகிறது. ஜனநாயக ஆட்சியை விடவும், பழைய கால மன்னர் ஆட்சியே இருந்திருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகிறது. சமீபத்தில் இஸ்ரேல் பிரதமர் கொலை, நம் நாட்டு வன்முறைச் சம்பவங்கள், யூகோஸ்ஸிலாவியா போன்ற மற்றைய நாட்டுச் சம்பவங்கள் மனித உயிர்கள் துச்சமாக மதிக்கப் படுவதைத் தானே காண முடிகின்றது. வேதனைப்

படுவதைத் தவிர வேறு எதைத் தான் நாம் செய்ய முடியும்?

உங்கள் சஞ்சிகையான சிறுவர் அமுதமும் தனது ஏழாவது ஆண்டை நெருங்குகிறது. வினாவிடைப் போட்டிகளிலும், சொற்களைக் கண்டு பிடியுங்கள் போன்றவற்றில் ஈடுபாட்டோடு கலந்து கொள்ளும் வாசகர்களுக்கு எமது நன்றி கலந்த புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். அதே வேளையில் இதன் வளர்ச்சியில் ஈடுபாடு கொண்டு ஊக்கம் தரும் உங்கள் பெற்றோர்களுக்கும் இதயபூர்வமான நன்றிகளைத் தெருவித்துக் கொள்ளுகின்றோம்.

நன்றிகளையும் வாழ்த்துக்களையும் சொல்லும் வேளையில் சிறுவர் சஞ்சிகையில் சிறுவர்களின் ஆக்கங்கள் கூடுதலாக இருக்க வேண்டும். பரிசாகக் கிடைத்த புத்தகங்களில் இருந்தோ, வேறு புத்தகங்களில் இருந்து தமிழில் மொழி பெயர்த்தோ ஆக்கங்களை எழுதுங்கள். உங்கள் மொழியறிவை வளர்ப்பதற்கு இது உதவியாக இருக்கும். உங்கள் எழுத்துக்கள் கடல் கடந்து நம் நாட்டுக்கும் வேறு நாடுகளுக்கும் செல்லுகின்றது. உங்கள் எழுத்தும் வேறு நாடுகளுக்குச் செல்வது உங்களுக்கும் பெருமை தானே!

—ஆசிரியை—

ஊர்ந்து செல்லும் நத்தைகளை நீங்கள் பார்த்திருப்பீர்கள். இவை பூமியில் இந்த நாட்டில் மட்டுமல்ல எங்கள் நாட்டிலும் வாழுகின்றன. நத்தைகளில் 8000 இனங்கள் வரை விலங்கியல் நிபுணர்களால் கண்டு பிடிக்கப் பட்டிருக்கின்றன. இரண்டு அடி நீளத்திலிருந்து கண்ணால் பார்த்துக் கண்டு பிடிக்க முடியாத அளவு மிகச் சிறியனவும் இருக்கின்றன. நீரில் நீந்திச் செல்லக் கூடியன. நிலத்தில் தாவித் தாவிச் செல்வன. ஊர்ந்து செல்வன. இவற்றைவிடக் கடலுக்கடியிலும் நத்தைகள் வாழ்கின்றன.

நாம் வாழும் உலக[illegible] பார்ப்பதற்கு திடமாக, இறுக்கமாகத் தான் இருக்கிறது. ஆனால் எப்பொழுதும் நடுங்கிக் கொண்டே இருக்கிறது. வருடத்தில் 50,000 நடுக்கங்கள் வரை ஏற்படுவதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். ஒரு மணித்தியாலத்தில் 7 அல்லது 8 பூகம்பங்கள் ஏற்படுகின்றன. சில இடங்களில் நடுக்கமே ஏற்படுவதில்லை. கடலில் ஏற்படும் நடுக்கங்கள், மிகப் பயங்கரமான நட்டங்களை விளைவிக்கின்றன.

# தண்டனையா? பரிசா?

அதிகாலை. நித்திரை விட்டு எழுந்திருந்த அரசன் யோசித்தான். இன்று ஒரு அரச அலுவல்களும் இல்லை. முதன் மந்திரியும் இன்று தன் சொந்த அலுவல் காரணமாக வேறிடத்துக்குச் சென்றிருக்கிறான். முதல் மந்திரி இருந்தால் விகடத்தால் எல்லோரையும் சிரிக்க வைப்பதுடன் பொழுது போவதும் தெரியாமல் இருக்கும். என்ன செய்வது? என்று யோசித்தான். நீண்ட நாட்களாக வேட்டைக்குப் போகவில்லை. தன் படைகளுடன் வேட்டைக்குச் செல்லுவோம் என்று எண்ணினான்.

அரசன் தன்படைகளுடன் வேட்டைக்குப் போனான். வனத்தில் வேட்டையாட மிருகங்கள் அகப்படவில்லை. மிருகங்களைத் தேடி அலைந்ததில் எல்லோருக்கும் களைப்பு ஏற்பட்டது. அரசன் மாமர நிழலிலும், மற்றவர்கள் பக்கத்தில் இருந்த மர நிழலிலும் தங்கி இளைப்பாறினார்கள். அதேவேளையில், ஆடு மேய்க்கும் சிறுவனான இராமுவும் வழமைபோல தனது ஆட்டு மந்தைக் கூட்டத்தைப் புல் மேய்வதற்காக காட்டில் உள்ள ஆற்றங்கரைப் புல்வெளிக்கு அழைத்துச் சென்றான்.

ஆட்டு மந்தையை மேயவிட்டான். பின் மரநிழலில் இருந்து புல்லாங்குழல் ஊதியும், ஆட்டங்கள் ஆடியும் பொழுதைப் போக்கினான். மத்தியானம் ஆகிவிட்டது. காலைஉணவு உண்ணாதபடியால் பசி வயிற்றைக்

கிள்ளியது. ஒரு ஆட்டில் பாலைக் கறந்து குடித்தான். அவனுக்கு ஏனோ மாங்காய் சாப்பிட வேண்டும் போல இருந்தது. ஒவ்வொரு நாளும் காட்டுக்கு ஆட்டு மந்தைகளை மேய்க்க வருவதால் பழமரங்கள் எங்கெங்கு உண்டென்று அவனுக்குத் தெரியும்.



மாமரத்தை நோக்கிச் சென்றான். அரசன் நித்திரை செய்து கொண்டிருந்த மாமரமே அருகில் இருந்தது. அரசன் படுத்திருந்ததோ, அருகில் படைவீரர்கள் தங்கியிருந்ததோ, இராமுவுக்குத் தெரியவில்லை. அவன் கல் எடுத்து வீசினான். இரண்டு மாங்காய்கள் விழுந்தன. அதேவேளையில் கல் அரசன் தலையில் விழுந்தது.

"ஐயோ" என்று கத்தியவாறே அரசன் துடிதுடித்து எழுந்தான். படைவீரர்களும் பதைபதைத்து ஓடிவந்தனர். இராமுவும் மாங்காய் விழுந்த இடத்திற்கு ஓடிவந்தான்.

அரசன் தலையில் இருந்து இரத்தம் வழிந்து கொண்டிருந்தது. இராமு ஓடிவருவதைப் பார்த்ததும் விடயத்தை உணர்ந்தனர். இராமுவைப் பிடித்துக் கொண்டனர். அரசன் அவர்களை விலகும்படி கூறினான். பின் இராமுவைப் பார்த்துச் "சிறுவனே, மாங்காய்களை எடுத்து விட்டாயா?" என்று கேட்டான்.. இராமு இல்லையென்று தலையாட்டினான். மாங்காய்களை எடுத்துக் கொள்ளும்படி அரசன் கூறினான்.

பின் அருகில் அழைத்தான். இராமுக்குப் பொற்காசுகளைக் கொடுத்து அனுப்பினான். இராமு சென்றதும் படைவீரர்கள் அரசனைப் பார்த்து "அரசே! கல்லெறிந்த சிறுவனுக்குப் பொற்காசுகள் கொடுத்து அனுப்பினீர்கள்?" என்று கேட்டார்கள். அரசனோ அவர்களைப் பார்த்து வேதனையோடு சிரித்துக் கொண்டே கூறினான். "மரமோ கல்லெறிந்தவனுக்கு உண்பதற்குக் காய்களைக் கொடுத்தது. நான் மனிதன். உணர்ச்சி உள்ளவன். அவனுக்குப் பொற்காசுகளைக் கொடுத்ததில் தவறென்ன இருக்கின்றது?" என்றான். படைவீரர்கள் தலைகுனிந்தார்கள்.

எழுதி அனுப்பியவர்: மகிழினி பரமசிவம்

# சொற்களைக் கண்டு பிடியுங்கள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| வி | த் | து | வ | ம் | பூ | ம் | வ | ர | அ |
| வ | ப | றி | சு | ல | ப | ம் | ப | ர | ம் |
| சா | ப் | கூ | றை | பா | தி | றி | தி | மா | மா |
| ய | ப | டை | ப | க | ல் | பா | ம | தி | த் |
| ம் | ட | கு | ம் | மி | லை | டு | ட் | ரு | தி |
| மு | ம் | மு | ர | ம் | ம | நா | டி | ம் | றை |
| ண் | த | ற | ப | ர | ண் | கா | வ | ல | ன் |
| ய | றி | ண் | க | தி | வெ | ம | லை | கா | சு |
| தி | ம | கோ | ல் | த் | ட் | ணி | க | லி | வா |
| வே | வா | சு | ற் | ப | டி | ணா | ண் | கு | தி |

முடிவு திகதி: 5.2.96



# முரட்டுத் தவளை

கிணற்றுக்குள் வாழ்ந்த தவளை ஒன்று எப்படியோ வெளியே வந்து விட்டது. அதற்கு வெளி உலகத்தைப் பார்த்த பொழுது ஆச்சரியமாக இருந்தது. தத்தித் தத்திச் சென்று குளம் ஒன்றைக் கண்டது. தனியாகவே வாழ்ந்து வந்த கிணற்றுத் தவளைக்குத் தன்னைவிட பெரியவன் இல்லை என்னும் கர்வம் ஏற்பட்டது. கர்வப் பட்டதற்குக் காரணம் பெரிதாக ஒன்றுமில்லை. அதன் உருவமும்,



முரட்டுக்குரலும் தான்.

குளத்தைக் கண்ட கிணற்றுத்தவளை அதைப் பெரியகிணறு என்று நினைத்தது. குளக்கரையில் பல தவளைகள் வாழ்ந்தன. ஆனாலும் அவை குளத்துக்குள் அதிக தூரத்துக்குச் செல்லுவதில்லை. குளத்துக்கு அடியில் பெரியமீன் வாழ்ந்து வந்தது. மீன் தங்களைத் தின்றுவிடும் என்பதாலேயே தவளைகள் குளத்தில் அதிக தூரத்துக்கோ, குளத்தின் அடிப்பாகத்துக்கோ செல்வதில்லை.

கிணற்றுத்தவளைக்கு மற்றத்தவளைகளின் செயல்களைப் பார்க்க வேடிக்கையாகவும், சிரிப்பாகவும் இருந்தது. அதுதான் முரட்டுத்தனம் கொண்டது மட்டுமல்லாமல், அதற்குத் தான் என்னும் அகங்காரமும் சேர்ந்து கொண்டது. மற்றத் தவளைகள் தண்ணீருக்குப் பயந்துதான் குளக்கரையிலேயே வாழ்ந்து வருவதாக எண்ணியது. அதனால் மற்றத் தவளைகளைப் பார்த்து அதற்குச் சிரிப்பு வந்தது.

தான் அவைகளுக்கு வழிகாட்டியாகவும் தலைவனாகவும் இருக்க எண்ணியது. குளத்துக்குள் இறங்கியது. அப்போது மற்றத் தவளைகள் அதனைத் தடுத்தன. குளத்துக்குள் என்னை விடவும் பெரியமீனாவது இருக்கிறதாவது, நான் தானே பெரியவன் என்று எண்ணி மற்றத் தவளைகளைப் பார்த்து ஏளனம் செய்தது. மற்றத் தவளைகள் தடுத்தும் கேட்காமல் குளத்துள் இறங்கியது. இறங்கும் போது மற்றத் தவளைகளைப் பார்த்து "நான் வாழ்ந்ததே தண்ணீருக்குள் தான். என்னைப் பயப்படுத்துகிறீர்களே! நான் உள்ளே நடுக்கடலுக்குள் போய் வந்ததும் நீங்கள் என்னைத் தலைவனாக்கி விடுவீர்கள். நீங்களும் பயப் படாமல் நீருக்குள் சென்று வருவீர்கள்" என்று கூறிவிட்டு குளத்துள் இறங்கியது. நடுப்பகுதிக்குச் சென்று நீத்தி விளையாடியது. நீருக்குக் கீழே சென்று மேலே வந்தது.

இதைக் கண்ட தவளைகள் அச்சத்துடனும் ஆச்சரியத்துடனும் பார்த்துக்கொண்டன. மீன் இறந்து விட்டதோ என்று நினைத்தன. ஆனால் திடீரென்று

தவளையின் அவலச்சத்தம் மற்றத் தவளைகளுக்குக் கேட்டது. தாங்கள் சொல்லியும் கேட்காமல் சென்ற முரட்டுத்தவளையை மீன் சாப்பிட்டு விட்டு நீருக்கு மேலே வந்ததைக் கண்டன. தங்களின் சொல்லைக் கேட்டிருந்தால் தவளை தப்பியிருக்கலாம் என்று வேதனையோடு தங்களுக்குள் பேசிக் கொண்டன.

எப்படிப் பட்ட வாழ்வாயினும், எந்தச் சோதனையான சந்தர்ப்பத்திலும் வாழ்வை அமைதியாகக் கொண்டு செல்லப் பாமரமக்களால் மட்டுமே முடியும்.
~யாரோ~

மரியாதையோடு வாழ்பவர்கள் நண்பர்களைப் பெற்றுக் கொள்கிறார்கள். கருணையோடு வாழ்பவர்கள் அன்பைப் பெற்றுக் கொள்கிறார்கள்.
~பேனிஸ்~

ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு மனிதனும். தன் திறமையை வெளிக் கொணரும் விதத்தில் வாழப்பழகிக் கொள்ள வேண்டும்.
~தாலாய்லாமா~

## ஔவையார்



குலோத்துங்கன் அரண்மனையில் தங்கியிருந்த ஔவையாருக்குக் அரசி மிகப் பெறுமதி வாய்ந்த சேலையொன்றைப் பரிசளித்தாள். நூற்றுப் பத்தாயிரம் பொன் பெறுமதியுள்ள சேலையை அரசி மனமுவந்து அளிப்பதாக அரசன் மகிழ்ச்சியோடு ஔவைக்குக் கூறினான். அவரோ குலோத்துங்கனைப் பார்த்து 'மன்னனே, கூழுக்குப் பாடும் எனக்குச் சாதாரண நூற்சேலையே போதும். பெறுமதியான சேலையாய் இருந்தாலும், காலம் போக நைந்து விடும். ஆனால் என் பாடல்கள் காலங்காலமாய் வாழும் தன்மை கொண்டவை என்று கூறி மறுத்து விட்டார்.

கம்பர் இராமாயணத்தைக் திருவரங்கத்தில் அரங்கேற்றினார். அதைக் குலோத்துங்கன் சபையிலும் பாடினார். அரசன் ஔவையாரைப் பார்த்து 'ஔவையே, நீங்கள் தனிப் பாடல்கள் பாடுவதில் திறமையானவர். கம்பரோ காவியம் பாடுவதில் திறமைசாலி' அவருக்கு ஒப்பானவர் யாரும் இல்லையென்று புகழ்ந்தான். அப்போது

ஔவையார் மன்னனைப் பார்த்துக் கீழே காணப்படும் பாடலைப் பாடினார்.

வான்குருவியின் கூடு வல்லார்க்குத் தொல்கறையான்
தேன்சிலம்பி யாவர்க்கும் செய்ய அரிதால்(ம்)-----
யாம்பெரிதும்
வல்லாமே என்று வலிமை சொல்ல வேண்டாம்காண்
எல்லோர்க்கும் ஒவ்வொன்றே எளிது.

(குருவிக் கூடு, கறையான் கூடு, தேன்குளவியின் கூடு இவற்றை நாங்கள் செய்ய முடியுமா? முடியாது. அதுபோல நாமும் கெட்டிக்காரர் என்று பெருமை கொண்டு விடக்கூடாது. ஒவ்வொருவருக்கும் ஏதாவது ஒன்றே திறமையாகச் செய்ய முடியும்.)

இவ்வாறு கூறிய ஔவையார் சபையோரைப் பார்த்து 'நான் ஒரு கேள்வி கேட்கின்றேன்.

"கல்வி உடையீர் கருங்காகைத்திடையே
நெல்லியிலை உதிர்ந்து நிற்பதெவன்?-----

இதற்குக் கம்பர் விடையாக
-வல்லாய்கேள்
வெல்லா வழக்கை விலைவாங்கி வல்விக்கும்
வல்லாளன் சுற்றம் போல் மாண்டு. என்று பாடினார்.

அப்போது ஔவையார் கம்பரைப் பார்த்துக் கம்பரே, நான் சபையினரைப் பார்த்துக் கேட்ட கேள்விக்கு நீங்கள் ஏன் விடை கூறினீர்கள்?. இது போலத்தான் நீர் சிலம்பியின் வீட்டுச்சுவரில் எழுதிய பாதி வெண்பாவை நான் முடித்துக் கொடுத்தேன். இது புலவர்களின் இயல்பு. இதற்குத்தானே என்னிடம் பகையோடு நடந்தீர்கள்" என்று கேட்டார். கம்பர் ஔவையாரிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டார். அன்று முதல் இருவரும் நண்பர்களாக *இருந்தார்கள்.*

குலோத்துங்கனின் அரசவைப் புலவரான ஒட்டக்கூத்தருக்கும் பாண்டிய நாட்டிலிருந்து வந்த புகழேந்திப் புலவருக்கும் அடிக்கடி மோதல்கள் ஏற்பட்டு வந்தன. அதைத் தவிர்க்க அரசனால் முடியவில்லை. அப்பொறுப்பை ஔவையாரிடம் விட்டு விட்டான். இருவரில் சிறந்த புலமை பெற்றவர் யார்?. என்று சொல்லும்படி அவன் ஔவையாரிடம் கேட்டான். ஔவையார் 'ஒட்டக்கூத்தரே, அரசனையும், சோழநாட்டையும் சிறப்பித்து அதேவேளைலயில் சந்திரன் என்னும் பொருள் பாடலின் கடைசி வரிகளில் மூன்று தரம் வருமாறு பாடுங்கள்" என்று கேட்டார்.

ஒட்டக்கூத்தர் பாடலின் கீழ் வரிகளைப் பாடினார்.

–வெள்ளத் தடங்கா

பிள்ளை மதி கண்டு என் பேதை மதியும் இழந்தாளே

என்று பாடினார். ஔவையார் புகழேந்தியையும் பாடச் சொன்னார். புகழேந்தியார் பின்வருமாறு பாடினார்.

பங்கப் பளத்து .........

வெங்கட் பிறைக்கும் கரும் பிறைக்கும்

மெலிந்த பிறைக்கும் விழிவேலே.

என்று பாடினார். ஔவையார் ஒட்டக்கூத்தரைப் பார்த்து ஒட்டா, ஒரு மதியை விட்டு விட்டாயே!. என்னைப் பரிகசிக்கும் எண்ணத்தில் பாடலைக் கோட்டை விட்டு விட்டாய். அரசே, புகழேந்தியே சிறந்த புலவன். மூன்று சந்திரனையும் பாடி விட்டார்" என்றார். ஔவையைப் பாராட்டிய அரசன் ஒட்டக்கூத்தரைப் பார்த்து "' ஒட்டக்கூத்தரே, நீர் தோற்று விட்டீர். புகழேந்தியே சிறந்த புலவன்" என்றான்.

–தொடரும்–

**எப்பொழுதும் நல்லதையே செய்யுங்கள். அது சிலருக்கு மனதிறைவையும், சிலருக்கு வியப்பையும் தரும்.**
**~மார்க் டுவைன்~**



முல்லா ஓர் ஆட்டுக்குட்டியை வளர்த்து வந்தார். அது நன்றாகக் கொழுத்து வந்தது. அதைப் பார்க்கும் நண்பர்கள் ஏதாவது விசேஷம் வந்தால், "முல்லா இவ் விசேஷத்துக்கு உமது ஆட்டை வெட்டி ஒரு விருந்து தாருங்கள்" என்பார்கள். முல்லாவோ "அதற்கென்ன அவசரம் அடுத்த விசேஷத்துக்குத் தருகிறேன்" என்பார்.

விசேஷங்கள்தான் வந்து போனதே தவிர முல்லா விருந்து ஒன்றும் கொடுக்கவில்லை.

பொறுமையிழந்த நண்பர்கள் முல்லாவை எப்படியாவது ஏமாற்றி ஆட்டைத் தின்னத் திட்டம் தீட்டினர். அதன்படியே ஒருநாள் முல்லாவிடம் சென்று "முல்லா, நாளை இவ்வுலகம் அழிந்து விடுமாம். ஆகவே உங்களது ஆட்டை வெட்டி இன்றே எங்களுக்கு விருந்து கொடுங்கள்" என்றார்கள்.

முல்லாவும் சம்மதித்தார். ஆட்டை வெட்டி விருந்து கொடுத்தார். நண்பர்கள் தாம் முல்லாவை நன்றாக ஏமாற்றி விட்டோம் என்ற திருப்தியுடன் ஆட்டைச் சாப்பிட்டார்கள். விருந்து முடிந்ததும் நண்பர்கள் புறப்பட ஆயத்தமானார்கள். வரும் போது தாங்கள் அணிந்திருந்த தொப்பிகளையும், மேலங்கிகளையும் முன்னறை வைத்துவிட்டு வந்திருந்தார்கள். ஆகவே அவற்றை எடுக்கச் சென்றார்கள். ஆனால் அவையை அங்கு காணவில்லை.


முல்லாவிடம் சென்று "முல்லா நாங்கள் வரும்போது அணிந்திருந்த தொப்பிகளையும், மேலங்கிகளையும் பார்த்தீர்களா?" என்று கேட்டார்கள். "பார்த்தேன்" என்று பதில் வந்தது. "ஓ, அவற்றை எடுத்துப் பத்திரமாக வைத்தீர்கள்

போலும். அவற்றைக் கொடுங்கள். நாங்கள் புறப்படுகிறோம்" என்று நண்பர்கள் கூறினர்.

"அவற்றைக் கொடுப்பததா? விருந்து சமைக்கும்போது அடுப்பு நன்றாக எரியவில்லை என்று மனைவி கூறினாள். உடனே உங்கள் தொப்பிகளையும் மேலங்கிகளையும் அவளிடம் கொடுத்தேன். அவள் அவற்றை அடுப்பில் போட்டு எரித்தாள். அடுப்பும் நன்றாக எரிந்தது" என்றார் முல்லா. முல்லா சொன்னதைக் கேட்டதும் நண்பர்கள் தீயை மிதித்ததைப் போலக் குதித்தார்கள். "எங்கள் தொப்பிகளையும் மேலங்கிகளையும் அடுப்பிலா போடுவது? என்ன அநியாயம்?" என்றார் நண்பர்களில் ஒருவர்.

"நண்பர்களே ஏன் கோபிக்கிறீர்கள் நாளைக்குத்தான் உலகம் அழிந்து விடுமே! தொப்பிகளும், மேலங்கிகளும் உங்களுக்கு எதற்கு? அதனால்தான் அவற்றை எரித்து விருந்து தயார் செய்து விட்டேன்" என்றார் முல்லா. முல்லா இப்படிக் கூறியதும் நண்பர்கள் என்ன சொல்வது என்பது தெரியாமல் திகைத்தார்கள். ஏமாற்ற வந்தவர்களே ஏமாந்தார்கள்.

## எழுந்து நில்லடா



"கொக்கரக்கோ" என்றே சேவல்
கூவி விட்டது! —அதோ
கிழக்கே வானில் வெளிச்ச முகமும்
தோன்றி விட்டது!
செக்கச் சிவப்பாய்ப் பகலோன் கூடக்
கிளம்பி விட்டதே!—அந்தோ
சின்னக் கண்ணன் இன்னும் நீயும்
தூக்கம் கொள்வதோ!

சோலைக்குயிலும் சுறுசுறுப்பாய்ப்
பறந்து செல்லுதே!—அது
தேனாய் இனிக்கும் கானமழையைப்

இசைத்துச் செல்லுதே!
காலைக் கடன்கள் வரிசையாகக்
காத்துக் கிடக்குதே!—சின்னக்
கண்ணன் இன்னும் கவலையின்றித்
தூக்கம் கொள்வதோ?

கன்றுக்குட்டி கயிறை அறுத்துத்
துள்ளிக் குதிக்குதே!—அது
கட்டுத் தொழுவில் அம்மாப் பசுவைத்
தேடி ஓடுதே!
இன்று கறந்த பாலை மடியில்
முட்டிக் குடிக்குதே!—அந்தோ!
இன்னும் தூக்கம் கொள்ளலாமோ?
எழுந்து நில்லடா!

கோகுலத்துக் கண்ணன் பெயரை
உனக்குச் சூட்டினோம்!—ஒரு
குறையுமின்றிச் செல்லமாக
வளர்த்து வருகிறோம்!
"ஓகோ"வென்றே புகழைப் பெற்றுத்
திகழ வேண்டாமோ?—இந்த
உணர்வு கொண்டு சின்னக் கண்ணா
எழுந்து நில்லடா!

—அழகு பழனிச்சாமி—

## சார்லி சப்ளின்

"தி வெகபொண்ட" சாப்லியின் நடிப்பை மேலும் பிரகாசிக்கச் செய்தது. நாடோடிக் கூட்டத்திடம் சிக்கிய ஒரு அபலைப் பெண்ணைக் காப்பாற்றுகிறான் ஏழையான வயலின் வாத்தியக்காரன். வயலின் வாசித்து வரும் பணத்தில் இருவரும் வயிற்றை நிரப்புகிறார்கள். ஓவியன் ஒருவன் அவளை ஓவியமாக வரைகிறான். ஓவியனும் பெண்ணும் ஒருவரையொருவர் விரும்புகின்றனர். வயலின் வாத்தியக்காரன் தன் காதலில் தோல்வி அடைகிறான். பெண்ணின் ஓவியம் கண்காட்சிக்கு வைக்கப்படுகின்றது.



கண்காட்சியைக் காணவந்த பணக்காரச் சீமாட்டி தன் மகள் அவளென அறிகிறாள். தன் மகளைக் காப்பாற்றிய வயலின்காரனுக்கு நிறையப் பணம் கொடுக்கிறாள். மறுத்த வயலின்காரன் வேதனையுற்ற மனத்தோடு அவர்களை வழியனுப்புகிறான். இந்தப் படம் சாதாரண நகைச்சுவையோடு

மட்டுமல்லாமல் காதல், வேதனை போன்ற பாவங்களையும் சேர்த்து நடித்திருந்தார். சார்லியின் திறமைக்கு இது எடுத்துக்காட்டாக விளங்கியது.

சார்லி மியூச்சுவல் நிறுவனத்தாருடன் இணைந்து பன்னிரெண்டு படங்கள் முடித்துக் கொடுத்தார். கதைகள் அமைப்பதற்குத் தான் மிகவும் கஷ்டப்பட்டதாக அவர் தமது சுயசரிதையில் எழுதியிருக்கிறார். இந்த நேரத்தில் சார்லியின் வயது இருபத்தேழு தான். தன்னிடம் பணம் நிரம்பியிருந்ததையும் சார்லி குறிப்பிடத் தவறவில்லை. " என் பணப் பெட்டியில் பணமழை பொழிகின்றது. ஒருவாரத்துக்குப் பத்தாயிரம் டொலர் பெற்று வந்த நான் இன்று ஐந்நூறாயிரம் டொலர் பெறுகிறேன்." என்று பெருமிதத்தோடு குறிப்பிடுகிறார்.


மியூச்சுவல் நிறுவனத்தாருடனான ஒப்பந்தம் முடியும் காலம் நெருங்கி வந்தது. அந்த வேளையில் ஒருநாள் சிட்னி வந்தார். "சார்லி, ஒரு விஷயம் தெரியுமா? நீ கோடீஸ்வரனாகப் போகின்றாய். ஃபர்ஸ்ட் நேஷனல் பட நிறுவனத்தாரிடம் ஒப்பந்தம் செய்திருக்கிறேன். இரண்டு ரீல் படங்கள் எட்டுத் தயாரித்துக் கொடுக்க வேண்டும். ஒரு மில்லியன் இருநூறாயிரம் டொலர்கள் கிடைக்கும்" தம்பியை அணைத்துப் பரவசத்துடனே அண்ணன் கூறினார்.

பணம் மிதமாகக் கிடைத்தது. சார்லி பெருமிதம் கொண்டார். ஆனால் ஆணவம் தலை தூக்கவில்லை. வசதியாக வாழ்வதற்காக சில மாற்றங்களைச் செய்து கொண்டார். ஒரு செயலாளர், வேலைக்காரன், கார், காரோட்டுனர். இவைதான் மாற்றங்கள். இக்காலத்தில் ஒருநாள் கடைவீதிக்குச் சென்றார். அப்போது தான் அறிமுகப்படுத்தப் பட்ட காரொன்று சார்லியை மிகவும் கவர்ந்தது. ஏழு பேர் அமர்ந்து செல்லக்கூடிய அந்தக்கார் நாலாயிரத்துத் தொள்ளாயிரம் டொலர் விலையுள்ளது. சார்லி எதையுமே யோசிக்கவில்லை. அந்தக்காரை தன் பேருக்கு அனுப்பிவிடும்படி நிர்வாகியிடம் சொன்னார். காரைப் பார்க்க வேண்டாமா? என்று நிர்வாகி சார்லியிடம் கேட்டார். "காரைப் பற்றி எனக்கு என்ன தெரியும்!" என்று சிரித்து விட்டுப் போய் விட்டார் சார்லி. நிர்வாகி பணமோ, முகவரியோ கூடக் கேட்கவில்லை. "உடனேயே அனுப்பி வைக்கிறோம்" என்று பணிவோடு சார்லியை அனுப்பி வைத்தார். சார்லி என்ற சராசரி மனிதன் எந்த அளவுக்கு உயர்ந்தவராகி விட்டார். அவ்வளவுக்குப் பணம் அந்தஸ்துப் பெற்றுவிட்டார் சார்லி.

–தொடரும்.–

*எவரெஸ்ட் சிகரம் ஆண்டுக்கு மூன்று சென்ரி மீற்றர் வீதம் உயர்ந்து கொண்டு போகிறது.*

# வாகனங்களும் மக்களும்



இன்றைய நாகரீக உலகத்தின் நவீனமயமான பலவகையான வாகனங்களை நாங்கள் உபயோகப் படுத்துகிறோம். பலவகையான இயந்திர வண்டிகளை (கார், புகைவண்டி, ஆகாயவிமானம், ஹெலிகொப்டர், படகு, நீராவிக் கப்பல்) நாங்கள் உபயோகப் படுத்துகின்றோம். ஆனால் முற்காலத்தில் மக்கள் மனித சக்திகளை மட்டுமே முழுமையாக நம்பியிருந்தார்.

எந்த இடத்திற்குச் செல்ல வேண்டுமென்றாலும் கால்நடையாகவே செல்ல வேண்டியிருந்தது. பொருள்களைத் தலையிலும், முதுகிலும், இடுப்பிலும் சுமந்தே காரியங்களை செய்ய முடிந்தது.

குழந்தைகளையும், வயோதிபர்களையும் முதுகிலும் தோள்களிலும் சுமந்து சென்றார்கள்.


காலத்தின் வளர்ச்சியால் மக்கள் சுமைகளைத் தூக்குவதில் புதுவகையைக் கையாண்டனர். ஓரளவான கூடைகள் இரண்டை மூங்கிலில் பிணைத்து இருகூடைகளிலும் சம அளவான தன்மையில் உணவுப் பொருட்களைக் கொண்டு சென்றனர். கூடைகளைத் தலையில் வைத்துச் சுமப்பவர்களும் இருந்தார்கள். இன்றும் கிராமப்புறங்களில் வசதியில் குறைந்தவர்கள் தலையில் சுமந்து செல்வது காணக் கூடியதாக இருக்கிறது.

தனி மனிதனால் தூக்க முடியாத சுமையாக இருந்தால் இருவர் சேர்ந்து தூக்கிச் சென்றனர். வசதி படைத்தவர்கள் பல்லக்கில் தூரப் பயணங்களை மேற் கொண்டார்கள். மனிதரை மனிதரே தூக்கிச் சுமந்தனர். நோயாளிகளையும் பல்லக்கிலோ, கதிரை, கட்டில் போன்றவற்றில் வைத்துத் தூக்கிச் சென்றனர். இருவராகவோ, நால்வராகவோ, ஆறு பேராகவோ சுமைக்கேற்றவாறு தூக்கிச் செல்வார்கள். மக்களை மக்களே தூக்கிச் செல்லும் வழக்கம் காலப் போக்கில் மறைந்து விட்டது.

அடுத்த கட்டத்தில் மக்கள் எப்படி?, எப்போது? வாகனங்களை உபயோகப் படுத்தினார்கள் என்பதைக் கவனிப்போம்.

-தொடரும்-

# சிறுமியின் சாமர்த்தியம்



கல்லூரியில் வெளிச்சம் தெரிந்தது. நான்கு நாட்கள் விடுமுறை அல்லவா?. கல்லூரி நாளையின்று தானே திறக்கும். சித்தியின் வீட்டுக்குச் சென்று கொண்டிருந்த பாமினி யோசித்தாள். நேரமோ இரவு ஒன்பது மணிக்கு மேலேயே இருக்கும். பாமினியின் வீடு அடுத்த


தெருவிலேயே இருப்பதால் அம்மா அவளை இரவு வேளையிலும் சித்தி வீட்டுக்கு அனுப்புவாள். பகல் நேரமாலும் பரவாயில்லை. ஆசிரியர் சங்கக் கூட்டம் நடக்கும். இரவில் கல்லூரி விழாக்களைத் தவிர வேறொன்றும் நடப்பதில்லையே?.

பாமினி தெருவைச் சுற்றிப் பார்த்தாள். ஒரேயொரு கார் மட்டும் நின்றது. சத்தமின்றி மெல்ல மெல்ல அடியெடுத்து வைத்தாள். கல்லூரி வளவுக்குள் அடியெடுத்து வைத்தாள். கல்லூரியின் பொருட்கள் வைக்கும் அறைக்குள் தான் வெளிச்சம் தெரிந்தது. பாமினி யன்னலோரம் சென்று எட்டிப் பார்த்தாள். உள்ளே நான்கு ஆட்கள் விளையாட்டு உபகரணங்கள், கொம்பியூற்றர், இன்னும் வேறு பொருட்களையும் வேறொரு பெட்டிக்குள் வைத்துக் கொண்டிருந்தனர். அவர்களின் உரையாடலில் இருந்து அவர்கள் திருடர்கள் என்பதையும் கண்டு கொண்டாள்.

"சத்தம் போட்டு பக்கத்து வீடுகளில் உள்ளவர்களைக் கூப்பிடுவோமா? ............ வேண்டாம். திருடர்கள் எனக்கு ஏதாவது செய்து விடுவார்களோ!" என்று யோசித்தாள். பின் மெல்ல

நடந்து தெருவுககு வந்தாள். பக்கத்து வீட்டுக்குச் சென்று கதவைத் தட்டினாள். வீட்டுப் பெரியவரிடம் விஷயத்தைச் சொன்னாள். வீட்டுப் பெரியவரும் வெளியே வந்து கல்லூரியைப் பார்த்தார். பாமினி சொல்லியது உண்மையென்று அறிந்து கொண்டார்.

அயலில் உள்ள வீட்டுக்காரர்களையும் மெல்ல அழைத்துக் கொண்டு கல்லூரியில் திருடர்கள் இருந்த அறைக்குள் நுழைந்து கையும்மெய்யுமாகத் திருடர்களைப் பிடித்தனர். பொலீசாரிடம் ஒப்படைத்தனர். பொலீசாரும் அயலில் உள்ளவர்களும் பாமினியைப் பாராட்டினார்கள். அடுத்தநாள் கல்லூரியில் பாமினியின் தைரியத்தைப் பாராட்டிப் பாராட்டுக்கூட்டம் ஒன்றை நடத்தினார்கள். பாமினிக்கு கல்லூரி அதிபர் தங்கப் பதக்கம் அணிவித்துக் கௌரவப்படுத்தினார். வீட்டுக்கு வந்த பாமினி அம்மாவுக்கும் அப்பாவுக்கும் தங்கப்பதக்கத்தைக் காட்டினாள். அம்மாவுக்கும் அப்பாவுக்கும் தங்கள் மகளை எண்ணியபோது பெருமையாக இருந்தது. பாமியைப் போல நீங்களும் சாமர்த்தியமாக இருக்கலாம் அல்லவா?



# கெட்டிக்காரச் சேவல்

காலை நேரம். சேவலொன்று மரத்தில் இருந்து கீழே இறங்கியது. வீட்டு உணவு அதற்குப் பிடிக்கவில்லை. வீட்டை விட்டுத் தூரச் சென்று இரை தேட விரும்பியது. உணவைத் தேடிக் கொண்டு வெகு தூரம் வந்து விட்டது. தான் காட்டுக்குள் நுழைந்து விட்டதை அது அறியவில்லை. உதிர்ந்த சருகுக் குவியலில் மேலே ஏறி நின்று நிறைய பூச்சி புழுக்களைக் கொத்தித் தின்றது. நிறைய உணவு சாப்பிட்ட மகிழ்ச்சியில், உரத்த சத்தத்தில் "கொக்கரக்கோ" என்று கூவியது.

புதருக்குப் பின்னால் இருந்த நரிக்குச் சேவல் கூவிய சத்தம் கேட்டது. மெல்ல எட்டிப் பார்த்தது. கொழுப்பும் இரத்தமும் கூடிய இறைச்சியை எண்ணி அதன் நாவில் நீர் ஊறியது.



மெல்ல மெல்ல அடியெடுத்துப் புதரை நெருங்கியது. சருகில் சத்தம் கேட்கவே, சேவல் திரும்பிப் பார்த்தது. நரியைக் கண்டதும் தனக்கு ஆபத்து வந்து விட்டதை அறிந்து கொண்டது. அருகில் இருந்த மரக்கிளைக்குப் பறந்து மேலே உயரமான இடத்தில் இருந்து கொண்டது.

உயரமான இடத்தில் இருந்தாலும் சேவல் பயத்தால் நடுங்கிக் கொண்டே கால்களால் மரக்கிளையைப் பற்றிப் பிடித்துக் கொண்டிருந்தது. நரி தந்திரமாகச் சேவலைப் பிடிக்க யோசனை செய்தது. பின் சேவலைப் பார்த்து "சேவல் தம்பி" என்று அன்போடு கூப்பிட்டது. சேவல் குனிந்து ஆச்சரியத்துடன் பார்த்தது. இதென்ன! எங்கள் இனத்தைக் கண்டாலே ருசி பார்க்கும் மிருகமாயிற்றே!. இவ்வளவு அன்புடன் அழைக்கிறதே!

"தம்பி, நாங்கள் எல்லோரும் சகோதரர்கள் தானே, ஏன் என்னைப் பார்த்துப் பயப்படுகிறாய்? உன்னுடன் பேசுவதற்கு எவ்வளவு ஆசையோடு வந்தேன். நீயோ எட்ட எட்டச் செல்கிறாய்" என்றது நரி. "அண்ணா, நீங்கள் சொல்வது

உண்மைதான். ஆனாலும் காலம் கெட்டுப் போய் விட்டது. யாரையும் நம்ப முடிவதில்லை. மனம் பயப்படாமல் என்ன செய்ய முடியும்" என்றது சேவல்.

"நீ நினைப்பது தவறு. பழைய மன்னர்களின் கதையை நீ கேள்விப்பட்டதில்லையா? பாம்பும் கீரியும் ஒரே புதரில் வாழ்ந்தனவாம். வேங்கையும் கலைமானும் ஒரே குளத்தில் தண்ணீர் குடித்தனவாம். பழைய மன்னர் கதைகள் பொய்யானவையா? சென்ற கிழமை காட்டில் மிருகங்கள் எல்லோரும் கூடினோம். சிங்கராசன் தலைமை வகித்தார். அன்று தொடக்கம் பறவைகளும் மிருகங்களும் ஒற்றுமையாக இருப்பதென்று சபதம் எடுத்துக் கொண்டிருக்கின்றோம். நீ அறியவில்லையா?" என்று கட்டுக்கதை சொன்னது நரி.


"அப்படியா செய்தி! நான் அறியவில்லை" என்று கூறியபடியே கழுத்தைத் திருப்பித் தன் வீடுள்ள திசையைக் கோழி பார்த்தது. "என்ன அங்கே பார்க்கிறாய்" நரி கேட்டது. "தூரத்தில் வேட்டை நாய்கள் வருகின்றன என்று

நினைக்கிறேன். சத்தம் உங்களுக்குக் கேட்கவில்லை?" சேவல் மறுமொழி சொன்னது. நரி ஓடுவதற்கு ஆயத்தமானது. அப்போது சேவல் நரியைப் பார்த்து "நரியாரே, இப்போது தானே கூறினீர் யாருமே பயப்படத் தேவையில்லை என்று. வரும் வேட்டைநாய்களுக்கு நான் பதில் சொல்கிறேன்" என்றது. நரி அந்த இடத்தைவிட்டு ஓடத் தொடங்கியது. ஓடும் நரியைப் பார்த்துச் சேவல் கொக்கரித்துச் சிரித்தது. பின்பு "முட்டாளே காலங்காலமாக நீ தான் புத்திசாலியென்று எண்ணி விடாதே!. எங்களுக்கும் புத்தி உண்டு" என்று கூறிச் தன் சிறகுகளால் படபடவென்று அடித்துக் கொண்டது.

*உலகில் மிகப் பெரிய அரண்மனை சீனாவிலேயே இருக்கிறது.பீஜிங் என்னும் இடத்தில் அமைந்துள்ள இந்த அரண்மனை 178 ஏக்கர் பரப்பில் நீள்சதுர வடிவில் 5 பெரிய மண்டபங்களுடனும், 17 மாளிகைகளுடனும் இருக்கின்றது. பதினெட்டாம் நூற்றாண்டில் இந்த அரண்மனை கட்டப் பட்டது.*

*இருபத்து நான்கு மணித்தியாலங்களில், அரை மணித்தியாலத்தை கண்கள் இமைப்பதற்காகச் செலவிடுகின்றது.*

# பன்றிக்குட்டியின் பெருமை



அம்மாவிடம் சொல்லி விட்டுப் புறப்பட்டது பன்றிக்குட்டி. இன்று அதனுடைய தோழனான முயல் தன் வீட்டுக்கு வரச்சொல்லி இருந்தது. அம்மாவும் புத்தி சொல்லித் தான் விட்டிருந்தாள். "அங்கும் இங்கும் பராக்குப் பார்க்காதே! விருந்து முடிந்ததும் நேராக வீட்டுக்கு வந்துவிடு. கொடிய மிருகங்கள் உன்னைச் சாப்பிடக் காத்திருக்கும். கவனம்" அம்மா சொன்னதற்கெல்லாம் தலையை ஆட்டிவிட்டு முயல் வீட்டுக்கு வந்தது.


முயல்த்தோழன் வீட்டில் நல்ல விருந்து. பழவகைகள், இலைவகைகள், தானியவகைகள் இப்படி ஏராளம். பன்றித்தம்பிக்குக் கொண்டாட்டம் தான். பலாப்பழத்தின் சுவை மிகவும் பிடித்திருந்தது. „இந்தப் பழத்தை

எங்கே வாங்கினீர்கள்" என்று பன்றி கேட்டது. எங்கள் தோட்டத்துப் பழம் தான்." என்றது முயல். இதை எங்கள் தோட்டத்திலும் உண்டாக்க வேண்டும் என்று மனதுக்குள் நினைத்த பன்றிக்குட்டி பலாச்சுளையின் உள்ளேயிருந்த விதையைப் பத்திரப் படுத்தி வைத்தது.

விருந்து முடிந்ததும் சிறிதுநேரம் இரண்டும் விளையாடின. திடீரென்று அம்மா சொல்லி அனுப்பிய புத்திமதி ஞாபகம் வந்தது. நேரம் அவ்வளவாகச் சென்றிருக்கவில்லை. விடை பெற்றுக் கொண்டு புறப்பட்டது. வழியில் ஓநாய் ஒன்று வழி மறித்தது. "சிறியவனாகிய நீ தனியாக எங்கே போய் விட்டு வருகிறாய்?" என்று விசாரித்தது. மெல்ல எட்டியெட்டி நடந்தவாறே பன்றிக்குட்டி "நான் விருந்துக்குப் போய்விட்டு வருகிறேன்" என்றது. நன்றாகப் பழகியவர்களைப் போல ஓநாய் "அங்கு என்ன என்ன சாப்பிட்டாய்?. ருசியாக இருந்ததா?" என்று கேட்டது.

எல்லாவற்றிற்கும் பன்றிக்குட்டி பதில் சொல்லியது. பலாப்பழம் சாப்பிட்டதையும்,

பலாவிதை நடுவதற்குக் கொண்டு செல்லுவதையும் கூறியது. ஓநாய்க்குச் சிரிப்பாக இருந்தது. பலாவிதை நட்டு மரமாக வளர்ந்து வருவதற்கு எவ்வளவு நாட்கள் வேண்டும்! பலாமரத்தை உண்டாக்கிப் பழம் சாப்பிட எண்ணுகிறதே முட்டாள் பன்றி. இன்னும் சிறிது நேரத்தில் நான் இதைச் சாப்பிட்டு விடப் போகிறேன்!



அன்போடு பேசிக் கொண்டு வந்த பன்றி திடீரென்று குரலை மாற்றியது. "முயல் என்னுடைய தோட்டத்தில் தான் இருக்கிறதென்று உனக்குத் தெரியுமா? என்

தோட்டத்தில் உள்ளதை என்னிடம் கேட்காமல் எப்படி நீ எடுத்துச் செல்லலாம்? அது என் தோட்டத்திலேயே நடவேண்டும். களவாக நீ எடுத்துச் செல்ல நினைத்த படியால் நீயே என் தோட்டத்தில் வந்து நடவேண்டும்." என்று கூறிக் கொண்டு தன் வீட்டுக்கு அழைத்துச் சென்றது.

பயந்து கொண்டே ஓநாயின் பின்னால் சென்று கொண்டிருந்த பன்றிக்குட்டி ஓநாயிடம் கேட்டது. "முயல் வீட்டுத் தோட்டம் அல்லவா உங்கள் தோட்டம் என்று சொன்னீர்கள்? இப்பொழுது வேறு தோட்டத்துக்கு கூட்டி வந்திருக்கிறீர்களே?". "இதுவும் எனது தோட்டம் தான். இந்தா, அலவாங்கு. மண்ணைத் தோண்டு." என்றது ஓநாய். நான் சிறியவன். அலவாங்கைத் தூக்க என்னால் முடியாது. நீங்களே மண்ணைத் தோண்டுங்கள்." என்றது பன்றிக்குட்டி.

தன்னை விட்டுப் பன்றி எங்கே சென்றுவிடப் போகிறது என்ற எண்ணத்தில் ஓநாய் சிறிதளவு தோண்டி எடுத்த பின் "விதையை வைத்து மூடு." என்றது. அதைப்

பார்த்த பன்றிக்குட்டி நல்ல ஆழமாகத் தோண்ட வேண்டும்" என்றது. இப்படிச் சொல்லிச் சொல்லியே ஓநாயை பெரிய குழியாக தோண்டச் செய்தது பன்றிக்குட்டி. பன்றிக்குட்டியைச் சாப்பிடும் எண்ணத்தோடு மண்ணைத் தோண்டிக் கொண்டே ஓநாய் இருந்தது. மேலே எட்டி "இது போதுமா?" என்று கேட்டபோது அதற்கு மறுமொழி சொல்வதற்கு பன்றிக்குட்டி அங்கு நிற்கவில்லை. அது தன் வீட்டில் தான் ஓநாயிடம் தப்பியதைச் சொல்லிப் பெருமைப் பட்டுக் கொண்டது.

*உலகில் 900 வகையான வெளவால் இனங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு வகை வெளவாலும் தன் நிறையிலிருந்து சரிஅரைவாசி உணவை ஒவ்வொரு நாளும் உட்கொள்ளுகின்றன.நித்திரை செய்யும் நேரத்தைத் தவிர மிகுதி நேரம் சாப்பாட்டிலேயே செலவழிகிறது.*

*பாம்புக்களால் இறக்கும் மனிதர்களை விடவும், தேனீக்களால் மக்கள் இறக்கும் விகிதம் கூடுதலாகும்.*

# வினாவிடைப்போட்டி

1. உலகின் கூரை என்று வழங்கப்படும் நாடு எது?
தீர்த்தம், பெட்டகம், பத்து.


2. "ஏர்ஜேர்னி" (AIR JANIHI) ஆசியாக் கண்டத்திலேயே மிக நீளமான குகையாகும். இது அமைத்துள்ள நாடு எது?
மஞ்சள், கிலேசம், அசிங்கம், பிரயாணம்.

3. பெண்டுலத்தின் மூலம் கடிகாரத்தை ஓடச் செய்த விஞ்ஞானி யார்?
கத்தி, கிலி, பல்லி, முன்யோசனை, அகம், பலிபீடம், மலிவு.

4 உலகிலேயே கூடுதலான பத்திரிகைகள் வெளிவரும் நாடு எது?
இஞ்சி, அந்திவானம், திராட்சை, நிர்யானை.

5. 1964ம் ஆண்டில் நடந்த ஒலிம்பிக் போட்டிகளில் ஆண்களுக்கான "ஜிம்னாஸ்ரிக்" போட்டிகளில் தங்கப் பதக்கங்களையும், வெள்ளிப் பதக்கங்களையும் பெற்றுக் கொண்ட இரண்டு நாடுகள் எவை?
ஜம்பவான், அப்பா, பாலம், இன்பம், ரம்பம், புஷ்பம், மயூரம்.

முடிவு திகதி: 5.2.96




KINDERFREUNDLICH MAGAZINE